International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 06 Issue: 03 July to September 2024 www.irjtsjournal.org

# ஞானவெட்டியான் வழி மரணத்தை வெல்வோம்!

நெறியாளர்
முனைவர் நே.க. ஹேம்லின் ஐடா
*உதவிப்பேராசிரியர்*
*தமிழியல்துறை*
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்*

இரா. கௌசிகா
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*தமிழியல்துறை*
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்*

**முன்னுரை:**

இறைவன் மேல் பற்றுக்கொண்டவர் பக்தர் ஆவார். இறைவனைப் பற்றித் தெரிந்தவர் சித்தராவார் என்று தேவாரம் குறிப்பிடுகின்றது. பக்தன் என்ற படியிலிருந்து சித்தன் என்ற படிக்கு முன்னேறிச் செல்வதே மரணத்தை வெல்லும் மார்க்கத்தில் ஒன்றாகும். காரணம் பக்தன், சித்தன், முக்தன் என்ற மூன்றாவது நிலையான முக்தியை அடைய இறைவனைப் பற்றித் தெரிந்துக்கொள்வது இன்றியமையாததாகிறது. நம் முன்னோர்களான சித்தர்கள் பல கலைகளில் தேர்ச்சிப் பெற்றிருப்பினும், மனித சமூகமானது தன் உடல், உயிர் இரண்டையும் பேணிக்காப்பதையே முதன்மையானதாகவும், மற்றவை அனைத்தும் அற்பமானதே என்பதை உணர்ந்தவர்கள். அதனை மெய்ப்பிக்கும் வகையில் திருவள்ளுவ நாயனார் எழுதிய ''ஞானவெட்டியான்'' என்ற நூலில்,

**"காலியுங்கழிந் தோடுவ தாகையால்**

**வாலிபங்கள் வளர்பிறை மாறிடும்**

**பாலனாய்வாலி பங்களில் கற்பங்காண்**

**வாலையாமினி வச்சிர தேகமாஞ்**

**சீலவாசி சிநேகித மானதால்**

**தூலமேயுடல் சோதிப்பிர காசமாய்**

**மாலியேது மறலியு மேதுகாண்**

**சூலிகபாலி சுடர்கொடி தீபமே"**[1]

இப்பாடலில், சரமானது தினமும் கேவலமதாகையாலும், வாலிபங்களும் வளர்பிறை போவதுபோல் மாறிடும். ஆகையால் பாலனாய் வாலிபத்தில் கற்பங்கொண்டால் வச்சிரதேகமாகும். அப்பொழுது சுத்தவாசி தேகமாவதனால் தூலவுடலானது சோதிப் பிரகாசமாகும். அதனால் எமனென்பவன் இலனாவான், ஈஸ்வர சோதியுண்டாகும் என்று மரணத்தை வெல்லும் வழியை ஞானவெட்டியான் நூல் குறிப்பிடுகின்றது. மேலும், இந்நூல் குறிப்பிடுவது போன்று 'மரணத்தை வெல்லும்' வழியைப் பற்றி பிறர் கூறிய கருத்தையும் இக்கட்டுரையில் காண்போம்.

**மனிதப்பிறவியின் நோக்கம்:**

மனிதனாகப் பிறந்தவர்கள் அனைவரும் ஒன்றை சிந்திக்க வேண்டும். நமக்கு ஏன் சாவு வருகின்றது? சாவு ஒன்று இருந்தால் பிறகு கடவுள் எதற்கு? நன்மை தீமைகள் எதற்கு? என்று சிந்திக்க வேண்டும். பிறவிகள் பல இருந்தால் இப்பிறவியில் ஏன் மனிதப்பிறவியாக வந்து பிறந்தோம்? ஆம். மரணம் என்பது நிகழக்கூடிய ஒன்றே. ஆனால், அது நாம் செய்த செயல்களுக்கு ஏற்ற மரணமா என்பதே இங்கு பார்க்க வேண்டும். நன்மை செய்தவர்களுக்கு மரணம் என்பது வெல்லக்கூடிய ஒன்றாகும். தீமை நிறைந்தவர்களுக்கு மரணமானது மிகப்பெரிய ரணமாகவே முடியும்.

**"இந்த உடம்புள்ளே தெய்வ தரிசனம் பெற்று, இறை ஆற்றலை வளர்த்து, உலகிற்குத் தங்கள் யோக சாதனையினால் ஒளியூட்டி மனித சமுதாயத்தைப் பாதுகாப்பதே சித்தர்களின் குறிக்கோள்"**[2] உலகில் வாழக்கூடிய அத்துணை மக்களும் தங்களின் மனித பிறவியிலிருந்து விடுபட்டு இறைநிலையை அடைவதே மரணத்தை வென்றதாகும். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரின் நோக்கமும் மனிதப்பிறவியில் ஏற்படும் மரணத்தை வென்று இறைத்தன்மையை அடைவதாகும்.

**மரணம் மறுமையின் தொடக்கம்:**

மறுமை என்றால் மரணத்திற்குப் பின் நாம் செய்த நன்மை, தீமைக்கு ஏற்ப சொர்க்கமும், நரகமும் கிடைக்கும் இடமே மறுமை வாழ்வு. இவ்வுலகமானது இம்மை என்றழைக்கப்படும். இவ்வுலக வாழ்வு நிலையில்லாதது. ஆனால், மறுமைக்கான வாழ்வு எவ்வளவு காலம் என்று நமக்கு இன்றளவும் தெரியாதது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2024, IRJTSR 

ஆனால், இவ்வுலக வாழ்வை நூறு வயது, எண்பது வயது என்று நம்மால் குறிப்பிட முடிந்த அளவிற்கு மறுமையைப் பற்றியக் கணக்கு யாரிடத்திலும் இல்லை.

**“புத்தர் ஆசைதான் உலகில் அனைத்து துன்பங்களுக்கும், நோய்களுக்கும், மரணங்களுக்கும் காரணம் என்று கண்டுபிடித்து, நான்கு உண்மைகளையும், எட்டு வழிகளையும் அறிவித்தார். சுருங்கக் கூறினால் பேராசையும், சுயநலத்தையும், தான் என்கிற அகங்காரத்தையும் ஒழிக்க வேண்டுமென்றார்”**[3] என்று தர்மராஜ் ஜோசஃப் அவர்கள் குறிப்பிடுகின்றார். ஆகையால், நிலையில்லா இவ்வுலக வாழ்வில் இன்பமும், துன்பமும் நிலையில்லாமல் வந்துபோவது போல் இல்லாமல், மறுமையில் செய்த நன்மைக்கு, நன்மைக்கிட்டுவதே மரணத்தை வென்றதற்கான அடையாளமாகவும், பலனாகவும் கிடைக்கும் என்பதை அறிந்துக்கொள்ள முடிகின்றது.

**பிறவாமை:**

இறைவனை ‘அம்மா’ என்று அழைத்த காரைக்காலம்மையாரின் வேண்டுதலே, ‘மீண்டும் பிறவாத வரம் வேண்டும், அவ்வாறு பிறந்தால் உன்னை மறவாத மனம் வேண்டும்’ என்பதை இங்கு நினைவு கூற வேண்டும். அவ்வகையில் பிறவா நிலை என்ற ஒன்று உண்டு, அதை மனிதனால் அடைய முடியும். அதுவே, மரணத்தை வென்று முக்தி நிலை அடைவதாகும்.

**“அல்லல் வாசல் ஒன்பதும் அருந்தடைந்த வாசலும்**

**சொல்லும் வாசல் ஓர் ஐந்தும் சொம்மிவிம்மி நின்றதும்**

**நல்ல வாச லைத்திறந்து ஞானவாசல் ஊடுபோய்**

**எல்லைவாசல் கண்டவர் இனிப்பிறப்பது இல்லையே”**[4]

என்று சிவவாக்கியர் இவ்வுடம்பு ஒன்பது வாசலைக்கொண்டு இவ்வாழ்வில் துன்பப்படுத்துகின்றது. அருத்தடைத்த வாசலாகவும், சொர்க்க வாசலான பத்தாம் வாசலை அறிந்துகொண்டு, பஞ்சாட்சரமாக மின்னிக்கொண்டு நிற்கிறது. அந்த நல்லவாசலை, ஐந்தெழுத்தை ஓதி, நந்தி விலகி, ஈசன் உறையும் ஞான வாசலில் சேர்ந்து இன்புறலாம். இதுவே இறைவனிருக்கும் எல்லைவாசல் என கண்டறிந்தவர்கள் இனி இப்பூமியில் பிறப்பது இல்லை என்கிறார்.

**உடம்பின் இன்றியமையாமை:**

உடம்பின்றி உயிரில்லை உயிரின்றி உடம்பில்லை. மரணத்தை வெல்லவேண்டுமெனில் உடம்பின்றி அச்செயல் நிகழாது.

**“உடம்பினைப் பெற்ற பயன் ஆவது எல்லாம்**

**உடம்பினில் உத்தமனைக் காண்”**

என்பது ஔவையின் ஞானக் குறள். இக்குறள், **“உடம்பைப் பெற்ற பயன் உடம்பிலேயே உத்தமனை – பரமாத்மாவைக் காண்பதுதான் என்று கூறிற்று”**[5] எனவே உடம்பினை இழுக்காக நினையாமல், தன்னுடைய உயிரினை மரணத்திலிருந்து விலக்கி வைக்க, இந்த உடம்பின் உதவியானது மிகவும் முதன்மையான ஒன்றாகும். இந்த மனித உடல் நாம் எடுத்து வந்ததற்கான காரணமே இறைவனைத் தனக்குள் காண்பதற்காகவே அன்றி மரணிக்க இல்லை.

**எண்ணத்தின் இன்றியமையாமை:**

வள்ளுவர் கூறுவதுபோல் மனத்திட்பம் உடையவர்கள் தாங்கள் நினைத்ததை எல்லாம் நினைத்தபடியே அடையப்பெறுவர். உடலினை நம் இரு கண்களால் பார்க்க முடிகின்றது. ஆனால் எண்ணம் என்பது நமக்குள் எழும் உணர்வுகளாகும். உடலைப் போலவே, எண்ணமும் மரணத்தை வெல்ல மிகப்பெரிய வழி அல்லது ஆயுதம் என்றும் கூறலாம்.

**“எண்ணம் என்பது சூழ்நிலையைப் பொறுத்தது. எனவே, சூழ்நிலை மாறும்போது எண்ணமும் மாறுபடுகிறது. அந்த நல்லெண்ணம் ஒன்றிலேயே இறைவன் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறான்”**[6] என்று தங்கவயல் லோகிதாசன் நல்லெண்ணத்தில் மட்டுமே இறைவன் வாழக்கூடியவன் என்று கூறுவதை அறிய முடிகின்றது. மரணத்தை வெல்ல ஆன்மீக ரீதியில் பார்த்தாலும் இறைவன் தனக்குள், அதாவது தனக்குள் இறைவனைக் கண்டு தொழுவதே மரணத்தை வென்றதாகவும் கருதப்படுகின்றது.

**எண்ணம் சரியில்லையெனில் எல்லாம் நட்டமே:**

ஒரு மனிதன் இறைவனை நம்பும்போதும், நன்மை தீமைப் பற்றிய எண்ணங்கள் அவனுக்குள் இருந்தால் மட்டுமே ஒருவனால் நீதி, நேர்மை, நியாயம், அன்பு, பண்பு, ஒழுக்கம் என்று அனைத்து நல்ல குணங்களும் அவனை வழிநடத்திச் செல்லும். ஆனால், இறையச்சமோ, ஒழுங்கற்று வாழும் வாழ்க்கை முறையோடு வாழ்வதும், எண்ணங்கள் சரியில்லையெனில் அவன் மரணத்தை வெல்வது என்பது வெறும் கனவாகிவிடும்.

எண்ணம் என்பது மனிதனின் மனத்தில் எழும் ஒரு மிகப்பெரிய புதிர் ஆகும். அதனை அறிந்த ஒருவர் இறைவனே ஆவார். ஒருவரின் எண்ணமானது சரியாக இருப்பதற்கும், மனிதன் மரணத்தை வெல்வதற்கும் ஒற்றுமை உண்டு. **"ஒருவன் எந்த எண்ணத்துடனும், ஏக்கத்துடனும் இவ்வுலகில் நடனமாடிவிட்டு மரணமடைகின்றானோ – அதே எண்ணத்துடனேயே அவன் மறுமையில் மீண்டும் எழுப்பப்படுகின்றான்!"**[7]

எனவே, மறுமை என்பதும், மறுமையில் நல்வாழ்வானது கிட்ட வேண்டுமென்றால், அதாவது இறப்பானதை நாம் வெல்ல வேண்டுமெனில் நல்லெண்ணமும், இறையச்சமும் அவசியம் வேண்டும். ஏனெனில், எண்ணம் சீராக இருந்தால் அனைத்தும் சீராக இருக்கும் என்பதே இறைவனைக் காண்பதற்கான வழிகளில் முதன்யானதாகும்.

**ஞானத்தின் இன்றியமையாமை:**

மனிதனானவன் தன்னுடைய மனத்தினை ஒருமை நிலையில் கொண்டுவரும்போதே ஞானப்பாதையின் வழியானது திறக்கின்றது. அதனைத் திறந்து வைப்பதும் அந்த இறைவனே ஆவார். அந்த இறைவன்தான் குருவாகவும் நமக்கு வந்து இறைவனை அடையும் மார்க்கத்தைத் தெரிந்து அறிந்து நமக்குள் இருக்கும் கெட்ட எண்ணங்களான பூட்டை உடைத்து இறை தரிசனத்தைப் பெறச் செய்து மரணத்தை வெல்ல பேருதவி புரிகின்றார். அந்நேரமே நமக்கான இப்பாவப் பிறப்பிலிருந்து விடுபடும் வழியும் நமக்குக் கிடைக்கின்றது.

**"விந்து பேதித்த வடிவங்களாய் எத்திசையும்**

**சின்சரா சர்க்குலமும் வந்துலாவி**

**விண்டுபோய் விட்டவுடல் சிந்தைதான் உற்றறியும்**

**மிஞ்சு நீ விட்டவடி வங்களாய்**

**வந்து நாயிற் கடையன் எந்து ஞானப்பதவி**

**வந்துதா............"**[8] **(திருப்புகழ் 901)**

இப்பாடல், சுக்கிலம் எனப்படும் வித்தின் வழியாக மானுடன் பல்வேறு பிறவிகளில் பிறந்து துன்பமடைகிறான். அதுமட்டுமின்றி மனத்தடுமாற்றம் அடைந்து பாவ விளைவுகளை மேற்கொள்கிறான். இவற்றுக்கும் காரணம் ஞானம் இல்லாததாலே என்று ஞானத்தின் தேவையை அருணகிரியார் குறிப்பிடுகின்றார்.

அவ்வகையில், மனிதனானவன் பலப் பிறவிகள் எடுத்துத் துன்பப்படுவதைத் தவிர்த்து, மரணமில்லாப் பெருவாழ்வைப் பெற ஞானத்தினைப் பெற்று மரணத்தை வெல்வோம்.

**மணி, மருந்து, மந்திரம்:**

**"மணி என்றால் ரசமணி, பாதரசம் என்றும் குறிப்பிடுவர். மருந்து உடலுக்கும் மந்திரம் மனதுக்கும், மணி ஆன்ம நலனுக்கும் பயன்படும் என்பது சித்தர் எண்ணம். இம்மூன்றும் இணைந்து செயல்படுவதே மரணமில்லாப் பெருவாழ்வு"**[9] என்று இரா. மாணிக்கவாசகம் தன்னுடைய ரசமணி ரகசியம் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ரசமணி மின்காந்தத்திற்கு இணையானதாகும். சக்தியின் திடவடிவமே ரசமணியாகவும், இது பஞ்சபூதங்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றலுடையதாகும். எனவே, மரணம் என்ற ஒன்றை நம்மால் வெல்ல முடியும் என்பதை நம்புவதற்கு இதுவும் ஒரு ஆதாரமாகத் திகழ்கின்றது.

**ஆறு ஆதாரங்கள்:**

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி மற்றும் ஆஞ்ஞை ஆகிய ஆறும் ஆறு ஆதாரங்களாக சித்தர்களின் ஒக நூல்கள் கூறுகிறது. இந்த **"ஆறு நிலைகளையும் வீடு கொண்ட ஏறு போலக் கடந்து சென்றால், உயர் ஞான நிலையை அடைவதுடன் மரணமில்லாப் பெருவாழ்வைப் பெறலாம்"**[10] என்கிறார் முனைவர் இர. வாசுதேவன். மனிதன் பிரணாயாமம் என்னும் மூச்சுப்பயிற்சியினால், ஆறு ஆதாரங்களையும் அடைந்தவர்கள் மனிதர்களுக்கெல்லாம் சிறப்பான மாமனிதர் ஆவார்.



© 2024, IRJTSR 

**திருக்குறளும் ஆறு ஆதாரங்களும்:**

**"படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்**

**உடையான் அரசருள் ஏறு"**[11] (குறள் -381)

மரணமில்லாப் பெருவாழ்வு என்ற இறைத்தன்மையை அடைய மனிதன் கடக்கும் ஆறு ஆதாரங்களை திருக்குறளில் இறைமாட்சி அதிகாரமாக இருப்பதை அறியலாம்.

- **திருக்குறளில் ஆறு ஆதாரங்கள்:**

**"படை – நான்கு, குடி – ஆறு, கூழ் - பத்து, அமைச்சு – பன்னிரண்டு, நட்பு – பதினாறு, அரண் மூன்று"**[12]

- **சித்தர்களின் ஓகநூலில் ஆறு ஆதாரம்:**

**"குதத்துக்கும் குறிக்கும் நடுவிலிருக்கும் மூலாதாரம் - நான்கு இதழ் கொண்ட தாமரை போலவும், குறிக்கும் தொப்புளுக்கும் நடுவிலிருக்கும் சுவாதிட்டானம் - ஆறு இதழ் கொண்ட தாமரை போலவும், தொப்புளிலிருக்கும் மணிபூரகம் - பத்து இதழ் கொண்ட தாமரை போலவும், இதயத்தில் இருக்கும் அனாகதம் - பன்னிரண்டு இதழ் கொண்ட தாமரை போலவும், கண்டத்தில் இருக்கும் விசுத்தி – பதினாறு இதழ் கொண்ட தாமரை போலவும், நெற்றியில் புருவத்தின் நடுவில் இருக்கும் ஆஞ்ஞை - மூன்று இதழ் கொண்ட தாமரை போலவும் இருக்கும்"**[13] என்று திருக்குறளும், சித்தர்களின் ஓகநூல் நமக்கு ஆறு ஆதாரங்களைக் கடந்தால் மரணமில்லாதப் பெருவாழ்வு, மனிதனிலிருந்து மாமனிதனாகலாம் என்ற கருத்தினை வெளிப்படுத்துவதை அறிய முடிகின்றது.

**இறப்பைத் தடுத்தல்:**

இவ்வுலகில் வாழும் ஓரறிவு முதல் ஆறறிவு வரை அனைத்து உயிர்களுக்குமே சாவு என்பது உறுதி. ஆனால், அந்த சாவையே வெல்லும் வல்லமையை, இறைவனை அடையும் ஆசையை பிறப்பிலேயே வைத்துப் படைத்தது மானிடப் பிறவிக்கு மட்டும்தான்.

**"மனிதன் அழியா நிலையை அடைவதற்கான வைத்திய முறையை திருமூலர் சொல்லி வைத்தார். உடலின் அணுக்கள் அழியும் நிலை வரும்போது பிணி, மூப்பு, இறப்பு ஏற்படும். இதனைத் தடுப்பதற்கு உடம்பை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்ற திருமூலர் வலியுறுத்தினார்"**[14]. அதாவது ஆணின் உயிர் நீரும்(சுக்கிலம்), பெண்ணின் உயிர் நீரும்(சுரோணிதம்), இந்த இரண்டும் உயிர் நீரும் பஞ்ச பூதங்களுக்குக் கட்டுப்பட்டவை. மூலிகைகளால் உடம்பில் உள்ள அணுக்களின் அழிவைத் தடுத்தால் உடம்பை பிணி, மூப்பு, சாக்காடு இல்லாமல் காக்க முடியும்.

ஏனெனில், உயிருக்கு தான் யார், தன்னுடைய நிலை என்ன, குறிக்கோள் என்ன என்று தெரியாமலே ஆட்டம் ஆடுகிறது. முடிவில் குடத்தைப் (உடம்பைப்) போட்டு உடைத்துவிட்டு வெளியேறி விடுகிறது. மீண்டும் ஓர் உடம்பெடுக்கிறது. உயிரின் பயணம் நீண்டதாகவும், முடிவற்றதாகவும் உள்ளதால் இறப்பைத் தடுத்து இறையுடன் காப்பதே சிறந்ததாகும்.

**மரணத்தை வெல்லும் வழிகள்:**

மரணத்தை இந்த உலகில் வென்றவர்கள் என்று யாரையும் குறிப்பிட்டுச் சொல்ல இயலாது. காரணம், நம் நாட்டிலேயே நிறைய சித்தர்கள், முக்தர்கள், ஞானிகள் பிறந்து, வாழ்ந்து, மரணத்தை வென்று, சாகாக்கலையைக் கற்றவர்கள். அதற்கான வழிகளையும் தங்களின் நூல்களில் பலர் கூறிச் சென்றுள்ளதைப் பார்க்க முடிகின்றது.

**"காற்றைப் பிடிக்கும் கருத்தறிவார்க்கு**

**கூற்றை உதைக்கும் குறியதுவாம"**[15] (பாடல் - 571)

என்று தமிழில் சாகாக்கல்வியைப் பற்றி மக்களனைவரும் அறிய உதவும் முதல் நூலே திருமந்திரம் ஆகும். மேலும்,

**"பிராணன் அபானனும் கும்பித்து நட்ட**

**மிருக்க நமனில்லை தானே"**[16] (பாடல் - 574)


© 2024, IRJTSR

**"மேலை வாசல் வெளியறக் கண்டபின்**

**காலை வார்த்தை கனவிலும் இல்லையே"[17] (பாடல் - 622)**

இப்பாடல்களின் வரிகளின் மூலம் மரணத்தை வெல்ல முடியும் என்பதற்கான நம்பிக்கையையும், வழியையும் நம்மால் அறியமுடிகின்றது.

**நம்பிக்கையே மூலாதாரம்:**

நமக்குள் எழும் ஒவ்வொரு கேள்விகளுக்கும், விடைகளுக்கும், எண்ணங்களுக்கும், உணர்வுகளுக்கும் நாம் மதிப்பு கொடுக்கு வேண்டும். நம்மீது நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். ஒரு எண்ணமானது நமக்குள் துளிர்விடும்போது அந்த எண்ணம் சரியானதா? தவறானதா? என்று பிரித்துப்பார்த்து, நாம் நல்வழியில் தான் செல்கின்றோம், இதனால், நமக்கு இம்மையிலும், மறுமையிலும் நன்மையே கிட்டும் என்ற தன்னுடைய எண்ணங்களின் மீதும், தன்னால் மரணத்தையே வெல்ல முடியும் என்ற தன்னம்பிக்கையும் தனக்குள் இருந்தால் மட்டுமே, மனிதனானவன் நினைத்ததை அடைய முடிகின்றது.

**"நம்பிக்கை நசுக்கப்படும்போது நல்லெண்ணம் துளிர்ப்பது சாத்தியமில்லை!**

**நல்லெண்ணம் நாசமடையும் போது இறைவனையே அவன் எண்ணத் தவறிவிடுகின்றான்!"[18]**

மனிதன் தன்னுடைய மனத்தினைத் தூய்மையாக்கிக்கொள்ள வேண்டுமென்றால், அவன் தன்னுடைய மனத்தையே முதலில் அடக்கியாளத் தெரிந்திருக்க வேண்டும். இதற்கு தன்னால் முடியும் என்ற தன்னம்பிக்கையை அவன் தன் மீது வைத்தால் மட்டுமே அனைத்தும் மனிதனின் கைவசமாகும். இதனால், மனிதனின் மனமானது நம்பிக்கை அதிகரித்துப் பின் தான் செய்யும் ஒவ்வொரு செயல்களிலும் நன்மையைப் பெறும் பாதையை நோக்கி அவனுடைய வாழ்வானது பயனிக்கின்றது.

**முடிவுரை:**

இக்கட்டுரையில், மரணத்தை வெல்வோம்! என்ற ஒன்றை மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் அடைய வேண்டும் என்ற நோக்கத்திலும், அதற்கான வழிமுறைகளையும், அதனை அடையும் பொருட்டு கிடைக்கும் பலன், மனிதன் மரணத்தை வெல்ல தன்னுடைய இந்த வாழ்வில் எப்படியெல்லாம் இருக்க வேண்டும், இருக்கக்கூடாது என்றும், முன்னோர்கள், ஆய்வியல் அறிஞர்கள் கூறிய கருத்துகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, உடல், உள்ளம் இரண்டும் ஆரோக்கியமாக இருந்தால் மட்டுமே மரணத்தை வெல்ல முடியும் என்ற தெளிவு பிறந்துள்ளதை என்னால் உணரமுடிகின்றது.

ஆகவே , மனிதனாகப் பிறந்த நாம் இப்பிறப்பை துச்சமாக நினையாது, பயபக்தியுடன் நம்முடைய ஒவ்வொரு அடியையும் இப்பூமியல் எடுத்துவைக்க வேண்டும். அப்போதே அனைவரும், தன்னுடைய இந்த மனிதப் பிறவியையும், இந்த உடலையும், நமக்குள் எழும் எண்ணங்களின் மீதும் அதீத கவனம் செலுத்தி மரணத்தை வெல்லும் மார்க்கத்தை, அறிந்ததோடு மட்டுமின்றி நின்றுவிடாமல் அதனை நம் வாழ்வின் செயலுக்குக் கொண்டுவந்தால் நாம் ஒவ்வொருவருமே மரணத்தை வெல்வது உறுதி.

**சான்றெண் விளக்கம்:**

[1] ஞானவெட்டியான, திருவள்ளுவ நாயனார் - பா. 581

[2] சித்தரியல் ஆய்வு மாலை, கே. பாக்கியம் - ப. 131

[3] மரணம் மனிதனின் முடிவா?, தர்மராஜ் ஜோசஃப் எம், ஏ – ப. 100

[4] சித்தர் பாடல்கள், டாக்டர் ச. மெய்யப்பன் - ப. 19

[5] சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் தத்துவம், சாமி சிதம்பரனார் - ப. 41

[6] ஞானப்பூக்கள், இலக்கியச்சித்தர் தங்கவயல் லோகிதாசன் - ப. 18

[7] மேலது நூல் - ப. 34

[8] செங்கல்வராய பிள்ளை(உ.ஆ). திருப்புகழ் அருணகிரிநாதர் ரவீந்திரன், சி. ஆர். (தொ. ஆ)

[9] ரசமணி ரகசியம், இரா. மாணிக்கவாசகம் - ப. 11

[10] தமிழர் வாழ்வில் வளர்ந்த சித்த மருத்துவ உத்திகள், முனைவர் இரா. வாசுதேவன் - ப. 34

[11] திருக்குறள் - 381

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR

[12] தமிழர் வாழ்வில் வளர்ந்த சித்த மருத்துவ உத்திகள், முனைவர் இரா. வாசுதேவன் - ப. 35

[13] மேலது நூல் - ப. 34

[14] பதினெட்டு சித்தர்களின் வாழ்வும் வாக்கும், ஸ்ரீ தேவநாத சுவாமிகள் - ப. 118

[15] திருமந்திரம் மூலமும் உரையும், ப. இராமநாத பிள்ளை – பா. 571

[16] மேலது நூல் - பா. 574

[17] மேலது நூல் - பா. 622

[18] ஞானப்பூக்கள், இலக்கியச்சித்தர் தங்கவயல் லோகிதாசன் - ப. 38

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*
© 2024, IRJTSR